யுனிசெப்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் நிலையம்

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்

# நாடுகளுக்கிடையிலான மகவேற்புகள்

ஆண்டுதோறும் தொழில்மய நாடுகளைச் சேர்ந்தோர் ஆசியா, மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 20,000 பிள்ளைகளைத் தத்தெடுத்துக் கொள்கின்றனர். சுகதேகிகளாகவுள்ள சிசுக்களுக்கான கிராக்கி துரிதமாக வளர்ந்து வருகிறது.

வட அமெரிக்காவிலும், மேற்கு ஐரோப்பாவிலும் தத்துப் பிள்ளைகளாகக் கொடுப்பதற்கு இருக்கும் சிசுக்களின் தொகை அருகி வருகிறது. ஆரோக்கியமுள்ள ஒவ்வொரு சிசுவுக்கும் 50 விண்ணப்பதாரர் என்னும் விகிதாசாரத்தில் இங்கெல்லாம் கிராக்கி பெருகிவருகிறது. இதற்கு முக்கிய காரணம் கருத்தடை, கருச்சிதைவு என்பனவும் தனித்த தாய்மார் தமது பிள்ளைகளைத் தம்மோடு வைத்துக் கொள்வதில் நாட்டம் காட்டுவதுமாகும். குழந்தைகளைச் சுவீகரித்துக் கொள்வதற்தற்கு நெடுங்காலம் காத்திருக்க வேண்டிய நிலைமை தோன்றியதன் விளைவாக பிள்ளைப் பாக்கியமற்ற குடும்பங்கள் வெளிநாடுகளில் தனி ஆட்களிடம் அல்லது முகவர் நிலையங்களிடம் சிசுக்களை நாடிச் செல்ல ஆரம்பித்தனர். இவ்வாறான ஏற்பாடுகளைச் செய்வதற்கு மேற்படி நிறுவனங்கள் பெருந்தொகைப் பணத்தை வசூலிக்கின்றன.

நாடு விட்டு நாடு வாரியாக நடைபெறும் மகவேற்புகளில் சுமார் 75 சதவீதமானவை நன்னோக்குடனும் குழந்தையின் நலனைக் கருத்திற் கொண்டும் மேற்கொள்ளப்படுவதால் வெற்றிகரமாக அமைகின்றன என அனுபவமூலமாக அறியமுடிகிறது. ஆனாலும், குழந்தைகளுக்கு ஏற்பட்டுவரும் கிராக்கி, தரகர்களுக்கு மக்கள் கொடுக்க தயாராக உள்ள பணத்தின் தொகை, வளர்முக நாடுகளிலிலிருந்து குழந்தைகளைச் சுவீகரித்து வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்வது தொடர்பான சட்டங்களின் குறைபாடுகள் என்பன சிறுவர் உரிமைகள் மீது அக்கறை கொண்டுள்ள வட்டாரங்களில் பீதியைத் தோற்றுவித்துள்ளன. சுவீகாரம் தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளுக்கு முன்மாதிரியாக சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் விளங்குகிறது என்பது சிறுவர் உரிமைத் துறை நிபுணர்களின் கருத்தாகும்.

மகவேற்புத் தரகர்கள் அறவிடும் தொகை குழந்தை ஒன்றினுக்கு அமெரிக்க டொலர் 5000 முதல் 30,000 ஆகும். (இலங்கைப் பணத்தில் சுமார் 2,90,000 முதல் 17,40,000 ரூபா வரை) இது இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் நாடுவிட்டு நாடு சென்று அநாதைக் குழந்தைகளைத் தத்தெடுக்க தூண்டுதலாயிருந்த மனிதாபிமான உணர்ச்சி செத்துவிட்டதென்பதையே புலப்படுத்துகிறது. ஐரோப்பாவில் யுத்தத்தினால் அநாதைகளான பிள்ளைகளைப் பல அமெரிக்கர்கள் தத்தெடுக்க முன்வந்தபோது நாடுவிட்டு நாடு சென்று மகவேற்கும் வழக்கம் உத்வேகம் பெற்றது. கொரிய யுத்தத்தின் முடிவில் இந்த வழக்கம் மேலும் தீவிரமடைந்தது. அந்தக் காலகட்டத்தில் அநாதைகளும் அமெரிக்கர்களுக்குப் பிறந்த பிள்ளைகளும் கணிசமான அளவில் சுவீகரிக்கப்பட்டார்கள்.

துரதிர்ஷ்டவசமாக தற்போது நாட்டுக்கு நாடு நடைபெறும் சுவீகாரம், குடும்பச் சூழலை இழந்த குழந்தைகளின் பிரச்சினைகளுக்குப் பரிகாரமாக அமைவதற்குப் பதிலாக பிள்ளையில்லாக் குடும்பங்களின் பிரச்சினைக்குப் பரிகாரமாகவே மாறியுள்ளது. பலத்த கிராக்கி, கொள்ளை லாபம் என்பனவும் பல தரப்பட்ட செய்திச் சரடுகளுக்கு வழிவகுத்துள்ளன. இவற்றுள் பின்வருவன அடங்கும்:

குளிர்காலப் பருவத்தில் அமெரிக்க, ஐரோப்பிய உல்லாசப் பயணிகள் மத்திய அமெரிக்க நாடுகளுக்கு சென்று அங்கு குழந்தைகளைப் பெற்று அங்கேயே அவற்றைப் பேர் பதிவித்த பின் அக் குழந்தைகளுடன் சொந்த ஊருக்குத் திரும்புகிறார்கள். ஜெர்மனிய ஆராய்ச்சியாளர் ஒருவர் 1987 இன் கோடைப் பருவத்தில் பிறப்பு இடாப்பொன்றைப் பரிசோதனை செய்தபோது 6 ஒல்லாந்தர், 8 பிரெஞ்சுக்காரர், 11 ஜெர்மனியர், 15 ஸ்பானியர்கள், 6 சுவிசுக்காரர்கள், 61 அமெரிக்கர் ஆகியோர் பிள்ளைகள் பெற்றதாகப் பதிவாகி இருந்ததைக் கண்டுபிடித்தார்.

லத்தீன் அமெரிக்க நாடொன்றிலே 35 வயதான ஒரு பெண், குழந்தைகளைத் திருடி உள்ளூர் வைத்தியர் ஒருவர், சட்டத்தரணி ஒருவர், வெளிநாட்டவர்கள் பலர் ஆகியோருக்கு தலா 11 டொலர் விலைக்கு விற்றமைக்காக கைது செய்யப்பட்டார். ஏறக்குறைய 30 பிள்ளைகள் வரை இந்தப் பெண் திருடி விற்றிருக்கலாமென்று உள்ளூர்ப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

33 வயதான ஐரோப்பியக் குடும்பப் பெண் ஒருத்தி, பொறுப்பற்ற கணவனுக்கும் அவனது மைத்துனனுக்கும் ஏழாண்டு காலத்தில் பெற்றெடுத்த ஏழு குழந்தைகளை சுமார் 35,000 டொலர் பணத்துக்கு விற்றார். இந்தக் குழந்தைகள் ஐரோப்பாவில், "புதுக் குழந்தைப் பெருஞ் சந்தை" ஒன்றினூடாக ஒவ்வொன்றும் 15,000 முதல் 25,000 பவுண் விலைக்கு மீண்டும் விற்பனை செய்யப்பட்டதாகப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டன.

ஐந்து பிள்ளைகளின் தாயான லத்தீன் அமெரிக்க அபலை ஒருத்தி தன் 10 வயது மகனை ஐரோப்பிய நாட்டுப் பெற்றோருக்கு, 300 டொலருக்கு தத்தாகக் கொடுத்த பின்னர், 7 வயதும் 12 வயதும் உள்ள மேலும் இரண்டு மகன்மாரையும் சுவீகாரத்துக்குக் கொடுக்க ஒப்பந்தம் செய்துள்ளார்.

உண்மையான (அதாவது உயிரீந்த) மற்றும் சுவீகாரப் பெற்றோர்களுக்கு தரகர்கள் தனிப்பட்ட முறையில் ஏற்பாடு செய்யும் சிசுப் பரிமாற்றம், பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இவ்வாறன தனிப்பட்ட ஏற்பாடு, பிள்ளையின் பாதுகாப்புக்கோ அதன் பெற்றோர் அல்லது தாபரிப்புப் பெற்றோரின் நலனுக்கோ உகந்ததல்ல. பொருளாதார நோக்கங்கள் காரணமாக, சட்ட ரீதியான மகவேற்புக்கும் பிள்ளை கடத்தல் தொழிலுக்கும் வேறுபாடு காண்பது சிரமமாகிறது.

தனிப்பட்ட முறையிலான மகவேற்பில் உள்ள வேறு முக்கிய குறைபாடுகளாவன:

★ மகவேற்புக்கான காரணத்தை நிர்ணயித்தலில் உள்ள சிரமங்கள்;
★ பெற்றோரின் சம்மதம் பெறப்பட்டதா என்னும் ஐயம்;
★ குழந்தையின் ஆரோக்கியம் பற்றி அரைகுறையான அல்லது பிழையான தகவல்கள்.

இன்றைய சர்வதேசப் போக்கு, பிள்ளை பிறந்த நாட்டிலும் சுவீகாரம் எடுக்கும் நாட்டிலும் தனிப்பட்ட முறையிலான சுவீகார நடவடிக்கைகளுக்குப் பதிலாக, தகுதிவாய்ந்த முகவர் நிலையங்கள் மூலமாக அவற்றை ஏற்பாடு செய்தலாகும். எந்த வகையான சுவீகாரத்துக்கும் கீழ்க்காணும் நடைமுறைகள் பின்பற்றப்படல் வேண்டுமென்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது:

● சுவீகாரப் பெற்றோரை மிக அவதானமாகத் தேர்ந்தெடுப்பதுடன் பிள்ளையின் புகுமனையைப் பற்றியும் விரிவாக ஆராய்தல்.

● சொந்த நாட்டிலிருந்து வேறொரு நாட்டுக்குக் கொண்டு செல்லப்படும் பிள்ளையின் விசேட தேவைகள் பற்றி, சுவீகாரப் பெற்றோரைத் தயார் செய்வதுடன் தத்தெடுத்த பின்னர் தேவையான ஆலோசனைகளையும், ஆதரவையும் வழங்கல்.

● பிள்ளைகளுக்கும் அவர்களைச் சுவீகரிக்க முன்வரும் பெற்றோருக்கும் "பொருத்தம்" பார்த்தல். இதில் பிள்ளையின் பின்னணி, தேவைகள் ஆகியவற்றுடன் அவசியமான தகவல்களையும் தாபரிப்புப் பெற்றோருக்கு வழங்குதலும் அடங்கும்.

உண்மையான (உயிரீந்த) பெற்றோரைக் குழந்தையிடமிருந்து நிரந்தரமாகப் பிரிப்பதற்குத் தயார் செய்தல்.

மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவிலும், முன்னைய சோவியத் நாட்டிலிருந்து சுதந்திரம் பெற்ற நாடுகளிலும் அண்மைக் காலங்களில் ஏற்பட்ட கொந்தளிப்புகளின் விளைவாக சுவீகாரத்துக்கு இருக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை துரிதமாகப் பெருகும் சாத்தியமுண்டு. 1991 இல் நாடுகளுக்கிடையில் சுவீகரிக்கப்பட்ட பிள்ளைகளின் மொத்தத் தொகையில், மூன்றில் இரண்டு பங்கினை ருமேனியா வழங்கியது. 1989 இன் பிற்கூற்றிலிருந்து 1991 இன் நடுக் கூறுவரையான 18 மாத காலப் பகுதியில் சுமார் 10,000 சிறுவர் சிறுமியர்கள் அந்நாட்டிலிருந்து வெளியேறினார்கள். அல்பேனியா, மோல்டோவா, ருமேனியா ஆகிய நாடுகள் தமது எல்லைகளை உலகுக்குத் திறந்துவிட்டன. பின்னர், இரவோடிரவாக சுவீகாரப் பெற்றோரின் சொர்க்கமாக அந்நாடுகள் மாறின. சிறுவர்களின் இனவாரியான ஒற்றுமையும் சுவீகாரம் தொடர்பான சட்டங்கள், சமூக கடப்பாடுகள் என்பன தளர்வாக இருந்தமையும் இதற்குக் காரணங்களாயின. அண்மைக் காலத்தில் நிகழ்ந்த நாடுகளுக்கிடையிலான மகவேற்புகளில் அரைக்கரைவாசிக்கு அமெரிக்காவே புகலிடமாக அமைந்தது.

நாடுகளுக்கிடையிலான மகவேற்புகளில் சிறுவர்களின் உரிமைகள் மீறுப்படுதல் தொடர்பாகச் சர்வதேச சமுதாயம் கொண்டுள்ள அக்கறையின் பயனாக, பிள்ளைகளின் சொந்த நாடுகளிலேயே மாற்று ஏற்பாடுகளைச் செய்யும் முயற்சி மீளவும் மேற்கொள்ளப்படுகிறது. கட்டுப்பாடுகளைப் பலப்படுத்தும் முயற்சிகள், தரகர்களாகத் தனிப்பட்டோருக்கு பதில் முகவர் நிலையங்களை நாடுதல், தத்துப் பிள்ளைகளின் சொந்த நாடுகளில் அவர்களின் பாதுகாப்புத் தொடர்பான சட்டங்களை இயற்றுதல் என்பன இம்முயற்சிகளிற் சிலவாம். மேலும், மகவேற்பு மற்றும் ஒரு குடும்பச் சூழலில் குழந்தை வளர வேண்டியதன் அவசியம் என்பன தொடர்பான உரிமைகளைச் சிறப்பாக விவரிக்கும் சிறுவர் உரிமை பற்றிய சமவாயத்தின் மதிப்பு அதிகரித்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சுவீகாரத்தை அங்கீகரிப்பதில் உறுதியான கட்டுப்பாட்டைப் பின்பற்றுதல், பிள்ளைகளை ஒரு நாட்டிலிருந்து வேறு நாடுகளுக்குக் கொண்டு செல்லும் விடயத்தில் கடும் நிபந்தனைகளை விதித்தல், இவற்றில் ஈடுபடுவோர் கொள்ளை இலாபம் சம்பாதிக்காது நேர்மையாக நடந்து கொள்வதை உறுதிப்படுத்துதல் என்பன சமவாயத்தை ஏற்றுக்கொண்டுள்ள நாடுகளின் கடமைகளாகும்.

குடும்பச் சூழல் மறுக்கப்பட்ட சிறுவர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்குதலும், பொருத்தமான மாற்றுக் குடும்பப் பராமரிப்பை அல்லது நிறுவனவாரியான உறைவிடத்தை உறுதிப்படுத்துதலும் சமவாயத்தை ஏற்றுக்கொண்ட நாடுகளின் கடமையென உறுப்புரை 20 கூறுகிறது. இந்தப் பராமரிப்பின்போது பிள்ளையின் கலாசாரப் பின்னணி கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். தாபரிப்பும் இதில் அடங்கலாம். பிள்ளையின் பிறந்த நாட்டிலேயே மாற்று நடவடிக்கை எடுப்பது விரும்பத்தக்கதென உறுப்புரை 21 கூறுகிறது. எனினும், பொருத்தமான நடவடிக்கை

எடுப்பது அல்லது, சுவீகாரம் எடுக்கக்கூடிய ஒரு குடும்பம் சொந்த நாட்டில் கிடைக்காத பட்சத்தில் நாடுகளுக்கிடையிலான மகவேற்பு நடைபெறலாமெனவும் அது குறிப்பிடுகின்றது. சமவாயத்தின் வேறு உறுப்புரைகளும் நாடுகளுக்கிடையிலான மகவேற்பு பற்றிக் குறிப்பிடுகின்றன.

சுவீகாரம் நடைபெறும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தகுதி வாய்ந்த அதிகாரிகளே அங்கீகாரம் வழங்கவேண்டும். பிள்ளையில் சூழ்நிலை தொடர்பான நம்பத்தக்க தகவலை ஆதாரமாகக் கொண்டே அங்கீகாரம் தீர்மானிக்கப்பட வேண்டும். உறுதி செய்யும் நாடுகள் இவற்றை உறுதிப்படுத்த வேண்டும். பிள்ளையின் சொந்த சமூக, தேசியப் பின்னணியில், அதாவது பிள்ளை பிறந்த நாட்டில், தகுந்த பராமரிப்பு வழங்கத் தேவையான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு, அதில் தோல்வி கண்டால் மாத்திரமே வெளிநாட்டுச் சுவீகாரம் பற்றிச் சிந்தித்தல் வேண்டும்.

மேற்சொன்ன பிரச்சினைகளை முன்னிட்டு, 1988 இல் தனியார் சர்வதேசச் சட்டம் தொடர்பாக ஹேக் நகரில் நடைபெற்ற மாநாட்டில், நாடுகளுக்கிடையிலான சுவீகாரத்தின் குடியுரிமை அம்சங்கள் பற்றிய சமவாயம் ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அத்தகைய சமவாயம் நாடுகளுக்கிடையேயுள்ள சுவீகாரம் தொடர்பான விதிகளை வரையறை செய்வதுடன் நடைமுறைகளைச் செம்மைப் படுத்தவும் உதவும். அத்துடன் அனுப்பும் நாடு, ஏற்கும் நாடு இரண்டினதும் கோட்பாடுகள், நடைமுறைகள் ஆகியவற்றில் ஓரளவு ஒருமைப்பாட்டையும் உறுதிப்படுத்தும். ஹேக் மாநாட்டின் தீர்மானத்துக்கு ஐக்கிய நாடுகள், ஐரோப்பிய சபை, அமெரிக்க ராஜ்யங்களின் அமைப்பு ஆகியவற்றின் ஆதரவு உண்டு.

உணர்ச்சிப் பாங்காகவும் ஏனைய வகையிலும் அல்லல் சில இருப்பினும், குடும்பங்களைப் பிரிந்து வாழும் பிள்ளைகளுக்குத் தாபன வாரியான பராமரிப்பிலும் சுவீகாரமே மேலானதென்று நம்பப்படுகிறது. நீண்ட காலம் ஒரு பராமரிப்பு நிலையத்தில் வளரும் பிள்ளை உள்ளூரிலோ வெளிநாட்டிலோ புதியதொரு தாபரிப்புக் குடும்பத்தைத் தேடிப் பிடிப்பது அரிது. ஏனெனில், அது குழந்தைப் பருவத்திலிருந்து பிள்ளைப் பருவத்தை எய்தி விட்டது. அத்துடன், ஒரு பராமரிப்பு நிலையத்தில் வளர்ந்துவிட்ட ஒரு பிள்ளை, தாபரிப்பும் பெற்றோருடன் இணைந்து வாழ்தல் கஷ்டம். வெளிநாடுகளில் சுவீகாரம் செய்யப்பட்ட பிள்ளைகளுள் ஐந்தில் மூன்று பங்கினர் சிறு குழந்தைகளே என்பது கவனிக்கத்தக்கது.

ஆகவே, சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் குறிக்கோள், குடும்பங்ளை இழந்த பிள்ளைகளுக்குக் கிட்டும் நல்ல வாய்ப்புகளுக்கு இடையூறு விளைவிப்பதன்றி அவர்களை விற்பனைப் பண்டங்களாகத் துஷ்பிரயோகம் செய்வதைத் தடுப்பதற்கேற்ற சர்வதேச நியமங்களையும், கட்டுப்பாட்டு நடைமுறைகளையும் நிலைநாட்டுவதேயாகும்.